முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 05.01.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 04.11.2023 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | A.C.P.ரத்தினசுப்ரமணியன் | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | A.C.பழனியாண்டி | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

15. வா.சா.ஆ.3 ஆவணம் 1939 ல் ஏற்பட்ட சங்க கூட்ட தீர்மானம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் "கமிட்டியின் தலைமை ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் நடராஜ முதலியாரை வெங்கட்ராம செட்டியாரால் பிரேயிறிக்கப்பட்டு ராத்தினவேலு முதலியாரால் ஆமோத்திக்கப்பட்டு" என்று குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. வேறு பெயர்கள் முன்மொழியாததால் ஸ்ரீமான் நடராஜ முதலியார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். காரியதரசி பதவிக்கு வெங்கட்ராம செட்டியாரை முன்மொழிந்து, முன்மொழிந்தவர் நடராஜ முதலியார் அதை ஆமோத்தித்தவர் அருணாச்சல செட்டியார், வேறு நபர்கள் முன்மொழியாததால் வெங்கட்ராம செட்டியாரை செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் போன்ற விவரங்கள் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான்.

16. அதே போல் தான் பொருளாளரும் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் 11ம் பக்கத்தில் 27.07.1975 அன்று சங்கக்கூட்ட தீர்மானத்தில் மகா சபை கூட்டம் கூட்டப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் 12ம் பக்கத்தில் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். தலைவருக்கோ, செயலாளருக்கோ, பெருளாளருக்கோ உபசெயளாளர் ஆகியோர்களுக்கு முன்மொழிந்ததாக எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் 11ம் பக்கத்தில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். தலைவர் செயலாளர் பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக வா.சா.ஆ.7 ஆவணம் 11ம்

பக்கத்தில் கண்டுள்ள தீர்மானம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான், பழைய தலைவரை நீக்கியதும், புதிய தலைவரை தேர்ந்தெடுத்ததும் ஒரே தேதியில் தான். ஒன்றாம் தீர்மானமானது ரங்கநாத பிள்ளை வரவு செலவு கணக்கு கொடுக்காததால் கணக்கு சரிப்பார்ப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். நான் செயலாளராக எந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் 2003.

17. வர்த்தக சங்க உறுப்பினராக எப்போது சேர்ந்தேன் என்றால் 1998. 1998 க்கு முன்னதாக நடந்த சங்க கூட்டங்களை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். 1973 ம் ஆண்டு அப்போதைய சங்க நிர்வாக குழுவின் உறுப்பினராக இருந்த டி.டி.கலியபெருளாள், வர்த்தகத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் ஸ்ரீ பூவராக சாமி தங்கும் இடத்தில் அவருக்கு சொந்தமான பொருட்களை வைத்து குடோனாக பயன் படுத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. டி.டி.கலியபெருளாள் குடோனாக பயன் படுத்தி இடத்தை அப்போதைய சங்க தலைவர் ரங்கநாத பிள்ளை இடத்தை காலி செய்ய சொன்னதற்கு பிரச்சனை ஏற்ப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

18. அந்த விரோதத்தால் டி.டி.கலியபெருளாள், தலைவராக இருந்த ரங்கநாத பிள்ளையை அவர் பதிவியில் இருந்து அப்புரப்படுத்தம், அவர் வசம் அப்போது இருந்த வழக்கு சொத்தையும் அவரிடம் இருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்து வந்தார் என்றால் இல்லை. இதன் காரணமாக தான் 1975 ல் புது சங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து வந்தார் என்றால் இல்லை. வா.சா.ஆ.8 ஆவணம் 19 ம் பக்கத்தில் 18.12.1975 அன்று முதல் தீர்மானமாக வரவு செலவு கணக்குகளை அடுத்த கூட்டத்தில் பரிசீலிக்கப்படுவதாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 2 ம் தீர்மானமாக புவனகிரி வர்த்தக சங்கத்தை அரசாங்கத்தில் பதிவு செய்யவேண்டும் என்றும் இதற்காக காரியங்களை தலைவரும், செயலாளரும் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

19. புவனகிரி வர்த்தக சங்கம் எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 18.09.1976. அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.9. Memorandum of Assosiation தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.61. வா.சா.ஆ.61 ஆவணத்தில் சங்கத்தின் சார்பில் வழக்குகள் தொடரவும், சங்கத்தின் மீது வழக்கு தொடரவும், சங்க பதிவு அலுவலகமான சிதம்பரம் கோர்ட் எல்லையே சங்கத்தின் வழக்குகளுக்கு பொருந்தும் இதற்கு உரிமை பெற்றவர் தலைவரே ஆவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.61 ஆவணத்தில் தலைவர், துணை தலைவர், செயலாளர் ஆகியோரின் கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.61 ஆவணத்தில் 8 ம் பக்கத்தில் செயலாளரின் கடமைகள் குறிப்பிட்டு

சொல்லப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் 05.01.1985 தேதி அன்று டி.டி.கலியபெருளால் ஆல் குடிநீர் இணைப்பு பெறுவதற்கு முன்பணம் செலுத்திய ரசீது என்றால் சரிதான்.

20. 1966 ல் சங்கத்திற்கு சொந்தமான இடமான 167B க்கு அப்போதைய சங்க தலைவரான ரங்கநாதன் பிள்ளையால் முன்பணம் செலுத்தி குடிநீர் இணைப்பு பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 167B இடத்தில் இப்போது குடிநீர் இணைப்பு உள்ளதா என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன், அந்த இடத்தில் தற்போது குடிநீர் இணைப்பு இல்லை. 167B இடத்தில் இருந்த குடிநீர் இணைப்பு தற்போது 167E- 1993 ல் மாற்றப்பட்டது என்றால் 167E குடிநீர்இணைப்பு உள்ளது ஆனால் அது 167B மாற்றப்பட்டதா என்று எனக்கு தெரியாது. அந்த மாற்றத்திற்கு பிறகு தற்போது வரை 167 E யில் ரங்கநாதன் பிள்ளை பெயரில் குடிநீர் இணைப்பு இருந்து தற்போது ஸ்ரீராமன் பெயரில் இருந்து வருகிறது என்றால் வர்த்தம் பெயரில் உள்ள இடத்தை அவருடைய பெயருக்கு மாற்ற ஸ்ரீராமன் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

21. வழக்கிற்கு பிறது ஸ்ரீராமன் குடிநீர் இணைப்பு மாற்றப்பட்டதா என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதாக நிளைக்கிறேன். OS.15/1985 என்ற வழக்கிற்காக வா.சா.ஆ.14 ஆவணத்தில் கண்டுள்ள வாடகை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை, அது உண்மையான ஆவணம் தான். வா.சா.ஆ.14 ல் கண்டுள்ள படி யாரும் வாடகைக்கு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் கண்டுள்ள ஆவணமானது ஜெகநாதன் பெயரில் வாங்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் வர்த்தக சங்க தலைவர் பெயரில் வாங்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம். ஜெயநாதன் அந்த இடத்தில் வாடகைக்கு இல்லை என்றாலும், அவர் எந்த ஒரு பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

22. வா.சா.ஆ.20 ஆவணம் 1ம் பக்கத்தில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். 16.03.2003 கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.20 ஆவணம் 5ம் பக்கத்தில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். வா.சா.ஆ.20 ஆவணம் 5 ம் பக்கத்தில் 2 ம் தீர்மானத்தில் கண்டுள்ள படி 1975,1976 ஆகிய வருடங்களில் நடந்த கூட்டத்திற்கு எந்த சுற்றறிக்கையும் அனுப்பியதாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி நான் ஆய்வு செய்யாமல் சொல்ல இயலாது. வா.சா.ஆ.20 ஆவணம் 23 ம் பக்கத்தில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். வா.சா.ஆ.20 ஆவணம் 23ம் பக்கத்தில் தீர்மானம் 1-ல் நமது புவனகிரி வர்த்தக சங்கம் 1939 ல் தொடங்கப்பட்டதாகவும், 1976 ல் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு பின்னர் அது புதுப்பிக்கப்படாமல் விடப்பட்டது எனவே புவனகிரி வர்த்தக சங்கத்தை மீண்டும் பதிவு

செய்ய தீர்மானிக்கப்பட்டது என்றால் சரிதான்.

23. புவனகிரி வர்த்தக சங்கம் செயல் படாததால் 1974 ல் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டது என்றால் சரியல்ல பதிவு புதுபிக்கப்படவில்லை என்று விலக்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் அதாவது 1974 க்கு முன்போ அதற்கு பின்போ எங்கள் சங்கம் இயங்கவில்லை என்றால் சரியல்ல. 1974 -2003 வரை புவனகிரி வர்த்தக சங்கம் இயங்க வில்லை என்றால் சரியல்ல. 2003 ல் சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி சங்கம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.